அறவழி

NONVIOLENCE

▶ வெளியீடு
அறவழிப்
போராட்டக் குழு

அஞ்சல் பெட்டி எண்: 2

சாவகச்சேரி
(N. V. D. A. G.)

அறம் 2 மாத இதழ் ※ 1987 வைகாசி பக்கம் 12 ※ விலை 2-00 வழி 13

பழமையை விரட்டுவோம்!
புதுமையை வரவேற்போம்!!

உலகில் மனித சமுதாயம் முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டு இருக்கின்றது. வாழ்வில் ஒவ்வொரு துறையிலும் மக்கள் இன்று மாறுதல்களைக் காணத் துடிக்கின்றனர். பழைய செயல்பாடுகள் —காரியங்களில் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுக்கொள்கின்றது.

புதிய எண்ணங்கள் — சிந்தனைகள் — செயல்பாடுகள்மீது மக்களுக்கு விருப்பம் ஏற்பட்டு வருகின்றது.

மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கு மாறுதல்கள் மிகவும் அவசியமானதாகும்.

ஆனால், நாம் இன்னமும் பழைய பெருமைகள், வீரங்கள், வெற்றி — தோல்விகளைப் பற்றியே பேசிப் பேசி எமது பெறுமதி மிக்க நேரத்தையும்—சக்தியையும் செலவழித்து இன்பம் காண்கின்றவர்களாகிவிட்டோம்,

பழைய பெருமைகள் —வீரங்கள் ஒரு காலத்தில் தேவைப்பட்டிருக்கலாம். ஆனால் நிச்சயமாக இன்று அல்ல.

இன்று எமக்குத் தேவைப்படுவது தான் என்ன? தமிழ் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும்—வளர்ச்சிக்கும் என்னென்ன தடைகள் உண்டோ அவற்றினை நாம் கண்டு கொள்ளவேண்டும்.

ஒரு சமுதாயம் வளர்ச்சிப் படிகளில் முன்னேற்றங் காணவேண்டுமாயின், அச்சமுதாயத்தின் உறுப்பினர்கள் மத்தியில் புதிய, புதிய எண்ணங்கள் —செயல்பாடுகள் துளிர் விட்டு முளைக்க ஆரம்பிக்கவேண்டும்.

எமது பெற்றோரின் —பெற்றோர் காலத்து எண்ணமும், சிந்தனையும், செயல்பாடும் இன்று எம் வளர்ச்சிக்கு உதவக்கூடியதா?

பழமை பேணுகின்ற, துருப்பிடித்த சிந்தனைகளையும், செயல்பாடுகளையும் விரட்டி அடித்து—எம்மத்தியில் புதிய, நல்ல, தொலை நோக்குப் பார்வை கொண்ட சிந்தனைகளை வரவேற்போம். அவற்றுக்கு உடனுக்குடன் செயல்வடிவம் கொடுப்போம்!

> ''எதிர்காலத்திற்காக நாம் விரைந்து திட்டமிடல் வேண்டும். ஆன்மீகச்சுடர், மனிதாபிமானம், வாழவேண்டும், கற்க வேண்டும் என்னும் மிகையான ஆசை என்பன மீண்டும் மனிதனிடத்தில் புத்துயிர் பெறக்கூடிய காலம், கைத்தொழில் நாகரீகத்திற்கும் அடுத்த கட்டமாகும். சமாதானக் கல்விக்கான திட்டமிடுதலும் அவசியமானது. சமாதானக் கல்விக்கான சவால் நாம் வரையும் திட்டத்தில் ஆழமாகப் பொதிந்திருக்கவேண்டும்.''

தமிழ் பேசும் அரசியல் கைதிகளை விடுதலை செய்க

* சர்வதேச வீடமைப்பு ஆண்டு—1987

தெற்கில் பிரதமரின் வீடமைப்புத் திட்டம்!
வடக்கில் லலித்தின் வீடுடைப்புத் திட்டம்!!

இவ்வருடத்தை சர்வதேச வீடமைப்பு ஆண்டாகப் பிரகடனம் செய்ய இலங்கை அரசு, ஐக்கியநாடுகள் சபையில் மிகத் தீவிரமாகப் பணியாற்றி அதில் வெற்றியும் கண்டுகொண்டது.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் வீடு மிகவும் முக்கியமானது. வீடில்லா மக்கள் ஆடை இல்லாத மனிதன் போலாவார்கள், இருக்க இடமின்றி. வீதிகளில் இருக்கும் மக்களுக்கு சர்வதேச வீடமைப்பு ஆண்டில் வீடுகள் அமைத்துக் கொடுத்தல், வேண்டும். இது இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமான அரும்பணி என மிக அழகாக உள்நாட்டு வெளிநாட்டு மேடைகளில் மிகத் தீவிரமான பிரச்சாரம் ஒரு பக்கம் நடை பெற்றுவருகின்றது.

அதேவேளை, பயங்கரவாதிகளின் முகாம்கள் அழிப்பு என்ற போர்வையில் வடக்கில் அப்பாவி மக்களின் அரும்பெரும் சொத்தாக இருக்கின்ற அழகிய, விலையுயர்ந்த வீடுகள் இராணுவத்தின் விமான, ஹெலிகொப்டர் குண்டுவீச்சுக்கு இலக்காகி அழிக்கப்படுகின்றன.

தெற்கில் முழத்துக்கு முழம் அமைக்கப் பட்டு வருகின்ற வீடமைப்புத்திட்டங்களில் மக்கள் அலாதியான அமைதியான வாழ்க்கை நடாத்துகின்றார்கள்.

வடக்கில் வீடுகள் இருந்தும், குண்டு வீச்சுக்குப் பயந்து, பதுங்கு குழிகளில் அவதியான, பயந்த வாழ்க்கை வாழ்கின்றனர் அப்பாவி மக்கள்.

வடக்கில், வீடுடைப்புத்திட்டத்தின் அடிப்படையில் இதுவரை பல நூறு வீடுகள் அழிக்கப்பட்டு, மக்கள் இருக்க இடமின்றி, ஆடை இல்லாத மனிதர்போல இரவல் வீடுகளிலும், பொதுஇடங்களிலும் தங்கிவருகின்றனர், இந்த மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண, எந்த ஆண்டும் பிரகடனமும் உதவப்போவதில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

நாட்டில் வாழ்கின்ற ஒரு பகுதி மக்களுக்கு ஆக்கப்பணித் திட்டங்கள், மறுபகுதி மக்களுக்கு அழிவுத்திட்டங்கள்.

இவ்வாறான இருவழித்திட்டங்களை ஒரே நேரத்தில் நடைமுறைப்படுத்தும் ஒரே நாடு உலகில் இலங்கையாகத்தான் இருக்க முடியுமோ?

நல்வாக்கு அறிவுரைகள்

1. தன்னடக்கம் தலைசிறந்த குணம்.
2. செருக்கு செல்வத்தைச் சிதறடிக்கும்
3. தன்னை மதிப்பவன் பிறரையும் மதிப்பான்.
4. துணிவுடன் துணையும் இருத்தல் வேண்டும்.
5. பேச்சின் அழகு உண்மையால் விளங்கும்.
6. வித்தைக்குத் தோழர் விநயமும் விவேகமும்
7. பகை நடுவில் தியும் இருக்கும்.
8. தானம் என்பது பிரதிபலன் கருதாதகொடை.
9. உள்ளமும் உடலும் ஒன்றுபட்டால் உன்னத வாழ்வு.
10. உரிமையோடு கடமையும் இணைந்தது.
11. ஒரு மனத்துடன் ஒழுங்காகச் செய்வதே செயல்
12. உழைப்பில்லா உணவு உப்பில்லா உணவு.
13. சொல்லின் மேன்மை செயலில் தொனிக்க வேண்டும்.
14. இன்பமான செயல் இதமாயும் இருக்கவேண்டும்.
15. பண்பில்லா வாழ்வு பதருக்கு நேராகும்.
16. உரிமையும் ஊதியமும் ஒழுங்கான கடமைக்குப் பின்.
17. அன்பும் பண்பும் அறவழியின் அளவுகோல்கள்.
18. அறிவில்லாக் கல்வி உயிரில்லா உடல்.
19. நல்லவர் உள்ளது நகரம் நயவஞ்சகர் உள்ளது நரகம்.
20. ஆடம்பரச் செலவு ஆளை அடிமையாக்கும்.
21. கண்ணியம் இல்லாத கண்டிப்பு கலவரத்தை உண்டாக்கும்.
22. சிரிப்பில் அடக்கமும் சிந்தனையில் தெளிவும் தேவை
23. கொடுக்கும்போது கனிவு இருத்தல்வேண்டும்,
24. உற்ற சமயத்தில் உதவுவதே உண்மை உறவு.
25. குறைகளைக் கூறக் கூறக் குழப்பம் உண்டாகும்.

(நன்றி: மில்க்வைற் செய்தி)

புதிய அரசியல் புகலிடச்சட்டம்!

அக்டோபரில் நடைமுறைக்கு வருகிறது

சுவிற்சலாந்தில் புதிய அரசியல் புகலிடச் சட்டம் இவ்வருடம் அக்டோபர் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதுவரைகாலமும் சுவிஸில் அரசியல் புகலிடம் கோரிச்செல்பவர்கள், பல்வேறு முறைகளில் நாட்டுக்குள் புகுந்து தாம் விரும்பும் மாநிலத்துக்குச் சென்று, தமது விண்ணப்பத்தைச்சமர்ப்பித்து, புகலிடம் கோருவதையே வழக்கமாகக்கொண்டு வந்தனர்.

ஆனால் புதிய சட்டம் நடைமுறைக்கு வரும்போது, குறித்த எல்லைக்காவல் நிலையங்களில் அகதிகள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும். அங்கு அவர்களுக்கு உடனடியாக சிறு விசாரணை நடாத்தப்பட்டு அவரை நாட்டுக்குள் அனுமதிப்பதா? இல்லையா? என்பது சம்பந்தமாகத் தீர்மானம் எடுக்கப்படும்.

விசாரணை முடிவில், அரசியல் புகலிடம் கோரியவர்களை அனுமதிப்பதாயின், சமஷ்டி பொலிஸ் அவரைத் தாம் விரும்பிய அல்லது தீர்மானிக்கும் மாநிலமொன்றுக்கு அனுப்பி வைப்பர்.

மாற்று வழிகளில் நாட்டுக்குள் பிரவேசிப்போரும் குறித்த எல்லைப் பொலிஸ் நிலையங்களுக்கே அனுப்பி வைக்கப்படுவர்.

விசேட விதிகள்

அகதிகளுக்கான விசேட விடுதிகள் நிறுவவும் இப்புதிய சட்டம் வாய்ப்பு அளிக்கின்றது. தற்போதும் இவ்வாறான அகதிகள் விடுதிகள் உண்டாயினும், புதிய அரசியல் புகலிடச் சட்டப்படி, வேலைவாய்ப்பை உடைய, அல்லது சொந்த வருமானத்தில் வாழக்கூடிய அகதிகளையும் அவர்களுக்குப் பூரண அகதி அந்தஸ்துக் கிடைக்கும்வரை, குறித்த இவ்விடுதிகளிலேயே இவர்கள் வசிக்கும்படி கோரப்படுவர். இவ்வகை விடுதிகள் குறித்த எல்லைக் காவல் நிலையங்களுக்கு அண்மித்தே பெரும்பாலும் நிறுவப்படும்.

விசாரணைகள்:

தற்போது அரசியல் தஞ்சக்கோரிக்கை சம்பந்தமான முதற்கட்ட விசாரணை மாநிலப் பொலிஸாராலும், இரண்டாம் கட்ட விசாரணை சமஷ்டி அரச அனுவலகத்தாலும் நடாத்தப்படுகிறது. புதிய சட்டம் அமுலுக்கு வரும்போது சமஷ்டி அரச அலுவலகம் புகலிடக் கோரிக்கையாளரை நேரடியாக அழைத்து விசாரிக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை.

வேலைவாய்ப்பு

அரசியல் புகலிடக்கோரிக்கை விண்ணப்பத் திகதியில் மூன்றுமாத முடிவில் கோரிக்கையாளர் வேலைவாய்ப்பு அனுமதியைப் பெற உரிமையுள்ளவராவர். புதிய சட்டப்படியே வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

கோரிக்கை நிராகரிக்கப்படின்

அரசியல் புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்படின், கோரிக்கையாளர் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய காலக்கெடு விதிக்கப்படும். குறித்த திகதிக்குள் வெளியேறுதவர் கைது செய்து சிறையில் ஒரு மாதம் வரை வைத்திருக்கவும், நாடுகடத்தவும், புதிய சட்டம் அனுமதியை வழங்குகிறது.

சர்வசன வாக்கெடுப்பு

இப்புதிய அரசியல் புகலிடச் சட்டம் தொடர்பாக மக்கள் மத்தியில் சர்வசன வாக்கெடுப்பு நடாத்தட்டது. இவ்வாக்கெடுப்பின்போது 67.1% வாக்குகளால் புதிய சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆதரவாகக் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கை 1.179,779 ஆகும் சட்டத்தை எதிர்த்து 571'874 பேர் வாக்களித்தனர்.

நாட்டைவிட்டு வெளியேறுது, சட்ட விரோதமாக நாட்டில் தங்கியிருக்கும் அகதிகளை சிறைக்கு அனுப்பவும் நாடு கடத்தவும் அதிகாரம் அளிக்கும் சட்டமூலத்துக்கு 67.7% வாக்காளர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

(ஆதாரம்—செய்தி)

"கிராம மட்டத்தில் விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும். அதன் மூலமே சமுதாயத்தின் மறுமலர்ச்சியை ஏற்படுத்தமுடியும். கிராமரீதியாக ஏற்படும் மறுமலர்ச்சிதான் எமது இன, மொழி விடுதலைக்கு வித்திடமுடியும்."

தம்முடைய இலட்சியத்தை நிறைவேற்ற அறிவார்ந்த தனிமனிதனையே தலையாய சக்தியாக காந்தியடிகள் கருதினார். ''சமதர்மம் முதன் மன மாறுபடுபவரோடு தொடங்குகின்றது. அப்படிப்பட்ட ஒன்று இருக்குமானால் அந்த ஒன்றோடுசைபர்களை நீங்கள் சேர்க்கலாம். முதல் சைபர் பத்தாகும். ஒவ்வொரு சைபரும் முந்திய எண்ணிக்கையின் பத்துமடங்குகளாக மாறும். ஆனால் எப்படியிருந்தாலும், தொடக்கம் சைபராக இருந்தால் அதாவது எந்த ஒன்றும் தொடக்கத்தை ஏற்படுத்தாததால் சைபர்களால் பெருக்கினால் விளைவும் சைபர் மதிப்பாகவே இருக்கும். சைபர்களை எழுதச் செலவிடும் காலமும் காகிதமும் வீண்தான்'' என்று கூறுகின்றார்.

இது அவருடைய சிந்தனைக்கும் செயலுக்கும் முழுவதும் ஏற்றவகையில் அமைந்துள்ளது. அதாவது, சிந்தனைக்கும் செயலுக்கும் இடையில் வேறுபாடு இருக்கக்கூடாது. எதனை ஒருவர் போதிக்கின்றாரோ அதனையே அவர் பின்பற்றவேண்டும்.

அவரைப் போன்ற சமயவாதிகள் உடைமையை வெறுத்தாலும்—தனிச்சொத்துக்களை உதறினாலும் சமுதாய அமைப்பினை மாற்றமுடியவில்லை எனக்குறை கூறியவர்களுக்கு மறுமொழியாக இறைமனிதர்கள் பொதுமக்களுக்கு சமதர்மத்தைப் பரிந்துரைக்கவில்லை என்றும், தனி மனிதனுக்கும் அவன் வாழும் சமுதாயத்திற்கும் இடையிலுள்ள தவிர்க்கமுடியாத இணைப்பை உணர்ந்திருக்கவில்லை என்றும் கூறினார்.

ஆனால் இது சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. ஏனென்றால் சமயச்சீர்திருத்தவாதிகள் சமுதாய மாற்றத்தைக் கொண்டுவர தனிமனிதர்களை மாற்றும் முறையில் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்றும் சுட்டிக்காட்டினர்.

இதுதான் அறிவியல் சமதர்மம் என்னும் முறை தோன்றக் காரணமாயிற்று என்று கூறி ''விஞ்ஞான சமதர்மவாதிகளை எதிர் நோக்குகின்ற அதே சிக்கலைத் தீர்க்கும் முயற்சியில் நான் ஈடுபட்டுள்ளேன்'' என்றும் குறிப்பிட்டார். சமுதாய சீர்கேட்டைத் தீர்க்கின்ற மேற்கத்திய முறையில் வன்முறைக் கறுப்படிந்திருப்பதைக் குறிப்பிட்டு, அந்தச் சாயின் இறுதிதல் அழிவினைக் காண்பதில் எதிர்க்கின்றார்.

இன்று மேற்கிலும்கூட, மிகுந்த சிந்தனையின் விளைவாக அவர்களுடைய முறைஅழிவை நோக்கி அழைத்துச் செல்வதை அறிந்து தனித்து நிற்கின்ற நிலையை உணர்ந்து காந்தியடிகள், ',பலாத்காரம், சுரண்டல், ஆகியவற்றின் நச்சு வட்டத்தில் இருந்து காத்துக் கொள்கின்ற தீர்வு முறையைக்காண என்னுடைய இடையருத முயற்சியில் மேற்கத்திய சமுதாய முறையை இரக்கத்தோடு படிக்கின்ற மாணவனாக இருந்திருக்கின்றேன்.

அமைதியற்று சத்தியத்தைத் தேடுகின்ற நாட்டம் மேற்கத்திய ஆன்மாவின் தாகமாக இருப்பதனைக் கண்டுகொண்டுள்ளேன். நான் அந்த உணர்வினை மதிக்கின்றேன். விஞ்

உண்மையான சமதர்மம்

—பேராசிரியர் மா. பா. குருசாமி

ஞான விசாரணை உணர்வோடு கிழக்கத்திய நிறுவனங்களை ஆராய்வோம்.''

''இதுவரை உலகம் கனவு கண்டுகொண்டிருப்பதைவிடச் சிறந்த உண்மையான சமதர்மத்தை உண்மையான பொதுவுடைமையை நாம் உருவாக்கவேண்டும். மக்களின் ஒட்டுமொத்த வறுமைக்குத் தீர்வுகாண இறுதிச்சொல் மேற்கத்திட சமதர்மம் அல்லது பொதுவுடைமைதான் என்று கருதுவது நிச்சயமாகத் தவறானதாகும்'' என்று கூறுகின்றார்.

மேற்கத்திய சிந்தனையாளர்கள் உருவாக்கிய விஞ்ஞான சமதர்மத்திற்கும், பொதுவுடைமைக்கும் மாற்றாக காந்தியடிகள் தர்மகர்த்தா மூலம் அடைகின்ற சமதர்மக் கோட்பாட்டை வழங்கினர். துர்அதிஷ்டவசமாக, காந்தியடிகளுக்கு அவருடைய தர்மகர்த்தாக் கோட்பாட்டை விளக்கமாகக் கூறநேரமிருக்கவில்லை. அரசியல் விடுதலை அடைவதற்கான அறவழி சோதனைகளில் அவர் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருந்தார்.

நாட்டுக்குச் சுதந்திரம் வந்த அவருடைய வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தில் அறவழி மூலம் சமுதாய ஒற்றுமையை ஏற்படுத்தும் இறுதிச் சோதனையில் அவருடைய வாழ்க்கையை முடித்துக்கொண்டார்.

அறவழி

தந்தை செல்வா என்றும் தெய்வமே!

—இராஜி சண்முகநாதன்

ஈழத்தமிழர் நிலைகண்டு
இரங்கித் துடித்த எம்தந்தை
வாழ்வை அகிம்சை நெறியோடு
வாழ்ந்து எம்மைக்காத்து நின்றார்.

சிங்கள அரசு தன்னோடும்
சேர்ந்து பார்த்து வழிநின்றார்!
பொங்கிய எழுச்சி வீரர்தம்மை
புன்னகையாலே அணைத்து நின்றார்!

சாதி சமயம் பார்க்காது
சமத்துவ வாழ்வை முன்னெடுத்து
நீதி வழுவா முறையோடு
நித்திய சேவை செய்து நின்றார்!

இரவும் பகலும் கண்விழித்து
இனிய தமிழ்க்குலம் விடிவுபெற
அயராதுழைத்த எம்தந்தை
அரைவயதிலே கிழவரானார்!

இன்னல் இன்றி நாம் வாழ
இனிது காலம் வருமுன்னே?
துன்பம் நிறைந்த விதியோடு
துயரில் எம்மை விட்டுச்சென்றார்!

கொடிய ஆட்சி தன்னிலே
கொடுமைப் படுவோம்; நாங்களென்று
முடிவாய்ச்சொன்னார்! வார்த்தையொன்று
''ஆண்டவன் தமிழரைக்
காக்கவேண்டும்''

இனத்தின் விடுதலைக்காக வாழ்ந்து
இன்னுயிரைத் தந்த எங்கள்
ஈழக்காந்தி நினைவை என்றும்
நினைவில் இருத்தி வாழ்த்துவமே!

அறவழி நின்று நாம் வாழ
அன்பு நெறிக்குள் எமையடக்கி
குறள் வழி சென்ற உத்தமனார்
''தந்தை செல்வா என்றும் தெய்வமே''

31—3—87 தந்தை செல்வா நினைவுதினத்தின்போது அறவழிப் பாலர் பாடசாலையில் வாசிக்கப்பட்டது.

மனம் ஒரு விளை நிலம்

மனம் நல்ல விளை நிலம். அதில் போட்டது விளையும். நிலத்தில் விளைச்சல் நல்ல நிலையில அமைய நாம் விதைகளைப் போட்டுவிட்டு இருக்கின்றோமா? இல்லையே!

நிலத்தைப் பண்படுத்துகின்றோம். நீர் ஊற்று கின்றோம். பக்குவப்படுத்துகின்றோம். குறிப்பாக களை எடுக்கின்றோம். ஏன்? நல்ல விளைநிலத்தைக் களை கெடுக்கும் என்பதால்.

அதேபோல மன நிலத்தில் மன நலத்தைக் காக்கும் வகையில் நாம் சில 'களை'களை எடுத்தே ஆகவேண்டும்.

அவையாவன:

—பேராசை
—உள்ளதைக்கொண்டு மகிழா எண்ணம்
—பொறுமை
—அடக்கமின்மை
—கீழ்ப்படியாமை
—நல்லது செய்யும் பழக்கமின்மை
—முயற்சியின்மை
—தாழ்வு மனப்பான்மை
—நல்லோரை நாடாமை
—நல்லன நினைக்காமை

—கேஜே—

படைப்புக்கள் வரவேற்கப்படுகின்றன

அறவழி, சமாதானம், மனிதஉரிமைகள், சமுதாய மாற்றம், சமூகசேவை போன்ற துறைகளிலான படைப்புக்கள், வரவேற்கப்படுகின்றன.

படைப்புக்களை அனுப்புவோர் இலகு நடையில், அறவழியின் ஒரு பக்கத்துக்கு மட்டும் பிரசுரிக்க ஏதுவாக எழுதி அனுப்பவும்.

—ஆசிரியர்

நாடகம் தடைசெய்யப்பட்டது

''கிறீஸ்துவின் ஆறுவது காயம்'' தலைப்பினைக் கொண்ட நாடகம் ஒன்றினை மேடையேற்றக்கூடாது என கேரள மாநில அரசு தடை விதித்துள்ளது.

இந்நாடகத்தினை திரு. பீ. எம். அந்தோனி என்பவர் எழுதித் தயாரித்திருந்தார். கிறீஸ்தவ மக்களின் பலத்த எதிர்ப்புக்குரல் காரணமாகவே இந்நாடகம் தடை செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது.

(முன் தொடர்ச்சி)

சமுதாய சேவை

சேர் பொன். இராமநாதன் உங்களுக்குக் காட்டியுள்ள கவனத்தை நீங்கள் பெற தருதியுடையவர்களென்றால் அந்தக் கவனமும் கவனிப்பும் லேடி இராமநாதனுலும் அவரின்கீழ் பணியாற்றுபவர்களினாலும் உங்களுக்கு அளிக்கப்பட்டால் நீங்கள் இன்றும் பல சேவைகள் செய்யவெண்டியிருக்கிறது, உங்கள் கல்லூரி மலர்களிலே பழைய மாணவிகள் சிலர் என்ன செய்கிறார்கள் என மன்னிக்க கூடிய பெருமையுடன் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னூர் இன்னாரை மணம் புரிந்தார் என்றும், நான்கு அல்லது ஐந்து அறிவித்தல்போன்றனவும் கண்டேன். பராயமடைந்த பெண் 25 வயதிலோ அல்லது 22 வயதிலோ மணம் செய்து கொள்வதில் தவறென்றும் இல்லை. சேவைக்காக ஒரு மாணவியாவது தன்னை அர்ப்பணித்தாள் என ஓர் அறிவித்தலும் கிடைக்கவில்லை, பெங்களூரில் 'மகாராஜா பெண்கள் கல்லூரி'யிலே நான் கூறியவற்றைக் கூற விரும்புகிறேன். இப்படியான கல்வி நிலையங்களை விட்டு வெளியேறியபின் நீங்கள் பொம்மைகளாக இருந்துவிட்டு வாழ்வை நீக்குவீர்கள். கல்விமான்களாலும் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சிகளுக்கு மிகவும் குறைந்த பலா பலனையே பெறுகின்றோம். பெரும்பான்மை மாணவிகள் பாடசாலைகளிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் வெளியேறிய பின் பொதுவாழ்விலிருந்து மறைந்துவிடுகிறார்கள்.

தமிழ்மண்ணில் காந்திஜீ

இக்கல்லூரிக்கும் நீங்கள் அவ்வாறு செய்யமுடியாது. செல்வி எமெரியையும் மற்றவர்களையும் அவர்களின் சேவைக்காக உதாரணமாக எடுங்கள். நான் தவறுக கூறுவிடின், அவர்கள் கன்னிகளாக வாழ்ந்தார்கள். ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு இந்தியப்பெண்ணும் மணம் செய்வதற்காகத்தான் பிறந்ததில்லை. ஒரு தனி ஆணுக்குச் சேவை செய்வதைவிடத் தங்களைச் சேவை நலனுக்காக அர்ப்பணித்த பல பெண்களை நான் காட்டமுடியும். இந்துப்பெண்கள் ஒரு புதிய சமுதாயத்தை அமைக்கவோ அல்லது முன்னிருந்த புகழுடைய பார்வதி, சீதா போன்றவர்களை மீண்டும் படைக்கவோ முன்வரவேண்டும்.

ஒப்பற்ற தகைமை

நீங்கள் சைவசமயிகள் எனக் கூறுகின்றீர்கள். பார்வதி என்ன செய்தாள்? அவள் கணவனுக்காகப் பணம் செலவு செய்யவில்லை. அல்லது தன்னை விலை கொடுத்து வாங்கவிடவில்லை. இங்கே கொடூரமான சீதனமுறை இருப்பதாகவும் இளம்பெண்கள் தகுந்த கணவன்மாரை அதனால் அடையமுடியாதெனவும் அறிகின்றேன். வயதுவந்த பெண்கள் (உங்களிற் சிலர் வயது வந்தவர்கள்) அந்தவிதமான எண்ணங்களை எதிர்க்கவேண்டும். கூடாத வழக்கங்களை எதிர்ப்பதனால் உங்களிற் சிலர் கன்னிகளாக இருக்கநேரிடலாம். மணம் செய்யவேண்டிய வயது வந்த பொழுது நீங்கள் வாழ்க்கைத் துணைவனை தேடவேண்டுமென கருதினால் பணத்திற்கோ புகழுக்கோ அழகிற்கோ தாகம் கொண்டவனைத் தேடவேண்டாம். ஒப்பற்ற தகைமைகளுடைய நல்ல பழக்கத்தை உடையவரைப் பார்வதி தேடியதுபோலத் தேடவும்.

(சுண்ணுகம் இராமநாதன் கல்லூரியில் 29—11—1927ல் காந்தி ஆற்றிய உரை)—ஆர்

கிராமிய தொழிலாளர் நலன்

(முன் தொடர்ச்சி)

நாம் தெரிந்து எடுக்கும் கிராமிய சமுதாயத்தின் சிறப்பான அம்சங்களையும் குறைபாடுகளையும் முதலில் கவனித்துக்கொள்ளவேண்டும். போக்குவரத்துவசதி, அவர்களுடைய குணம், நடையுடை பாவனை, சமயம், மனப்பாங்கு, புதியனவற்றையும் ஏற்கக்கூடிய மனநிலை இருக்கிறதா என்பதையும் கவனித்தல் அவசியம்.

தொழிலாளர் பொதுவாக தங்களை மற்றவர்கள் குறைபாடிவிடுவார்கள் என்ற பயமுடையவர்கள். முதலாளித்துவ சமுதாயத்தின்மீது இந்த அச்சம் இயல்பாகவே தொழிலாளருக்குண்டு. ஆகவே தொழிலாளர் நலன் செய்பவர்கள் அவர்களுடைய நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பெறுவது மிக அவசியமாகிறது.

பெண்களுடைய நலன்

கிராமத் தொழிலாளரில் அரைப்பங்கு பெண்களாக இருப்பார்கள். இவர்கள் சமூகத்தில் முக்கிய இடம் வகிப்பவர்கள். மனைவியாகவும் தாயாகவும் இரு முக்கிய கோணங்களிலிருந்து இவர்கள் தொண்டாற்றுகின்றனர், எனவே, எழுத்தறிவு இல்லாத பெண்களுக்கு அதனைக் கற்றுக்கொடுத்தல் மிக அவசியமாகிறது.

இவர்கள்மூலம் ஒரு குடும்பத்தில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தலாம். இவர்களுக்கு போதனை பின்வரும் விடயங்களில் முக்கியம்.

(1) சுகாதார முறைப்படி வாழ்தல்
(2) சுத்தம் சுகம்தரும் என்ற விடயங்களைப் படித்தல்
(3) குடும்பநலத் திட்டம்
(4) குழந்தைகளை நல்ல பண்பான முறையில் வளர்த்தல்
(5) தாய்ப்பாலே குழந்தைக்கு சிறந்ததென அறிதல்
(6) போசாக்குள்ள உணவுவகைகளைபற்றிய அறிவு
(7) உணவு வகையில் புதிய கண்டுபிடிப்புகளைப் பற்றியும் அவைகளின் முக்கியம் பற்றியும் விளக்குதல்
(8) சோயாவின் முக்கியத்துவம், அதன்மூலம் செய்யக்கூடிய உணவு
(9) நோய்த் தடுப்பு முறைகள்
(10) சூரிய வெப்பமூலம் உணவு தயாரித்து சக்தியைப் பேணுதல்

தமிழர்களுக்குக் காந்தி பாராட்டு

மகாத்மா காந்தியடிகள் தென்னபிரிக்காவில் இருந்து இறுதியாக விடைபெற்று இந்தியாவுக்குத் திரும்பும் சமயம் நடந்த பிரிவுபசாரத்தில் உரை யாற்றும்போது கூறியதாவது:

''தமிழர்களைச் சந்திப்பது போன்றே உணர்ந் தேன். எத்தனையோ ஆண்டுகளாக நான் போற்றி வளர்த்த உணர்ச்சி இது, இதற்குக் காரணம் வெளிப் படையானதே.''

''சத்தியாக்கிரகப் போராட்டத்திற் பங்கு பெற்ற இந்தியரிடையே உள்ள பல்வேறு பிரிவினருள் இப்போராட்டத்தின் உக்கிரத்தைத் தாங்கியவர்கள் தமிழர்கள் தாம் என்று நான் கூறுவேன். சத்தி யாக்கிரகத்தில் உயிர்த்தியாகம் செய்தவர்களில் மிக அதிகமான பேர் தமிழ்க்குலத்தைச் சேர்ந்தவர்களே.''

''நாடு கடத்தப்பட்டவர்கள் தமிழர்கள்; கடைசி வரை போராடியவர்கள் தமிழர்கள்; போராட்டமுடி விற் கடைசியாகச் சிறையில் இருந்து வெளி வந்த வர்கள் தமிழர்கள்; தங்கள் தொழில்களை இழந்தவர் கள் தமிழர்கள்.''

''டால்ஸ்டாய் பண்ணையில் வாழ்ந்த சத்தியாக் கிரகிகளிற் பெரும்பான்மையோர் தமிழர்கள். எந் தத் தரப்பிற் பார்த்தாலும் இந்தியாவின் மிகச் சிறந்த பரம்பரைக்கு மிகச்சிறந்த சான்று தமிழர் கள் என்பதை அவர்கள் மெய்ப்பித்திருக்கிறார்கள்,

''எள்ளளவும் மிகைப்படுத்தி இதை நான் கூற வில்லை. சிறைக்குச் சென்ற பெண்களிற் பெரும்பான் மையோர் தமிழர்களே. ஆண்டவன்மீதும் சத்தியத் தின்மீதும் தமிழர்கள் காட்டிய அளவு கடந்த நம் பிக்கை நமக்குச் சிறந்த உயிரூட்டும் சக்தியாக இருந்து உதவியது''

என்று காந்தியடிகள் உண்மை பேசியது வர லாற்றில் பொன் எழுத்துக்களாற் பொறிக்கத்தக்க தாகும்.

இதேபோல் அவர் குஜராத்தியர்களுக்குத் தனியே பேசும்போது, ''நமக்கு என்று ஒரு பத் திரிகை இருக்கிறது. அதில் நாம் பிரச்சாரம் செய்ய முடிகிறது. ஆனால், தமிழர்களுடைய தாய் மொழி யிற் பத்திரிகை எதுவும் இல்லை. ஆனாலும், அவர் கள் காண்பிக்கும் தைரியம்தான் என்னே? எல் லாவு சிறப்பாக அவர்கள் தங்களுடைய கடமையைச் செய்கிறார்கள். அவர்களிடம் இருந்து, நாம் பாடம் கற்றுக்கொள்ளவேண்டும்.''

''மற்ற இந்தியர்கள் தமிழர்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டுவருகிறது. அவர்கள் புகழ் மேலும் மேலும் விசாலமடைந்துகொண்டு போகிறது, தமிழர் தொண் டுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யமுடியும்? அவர் கள் கற்பிக்கும் பாடத்தை மற்றவர்கள் பின்பற்றி அரவம் இல்லாமல் நாட்டிற்குச் சேவை செய்வது தான் சிறந்த கைம்மாறு'' என்று கூறியுள்ளார்.

ஆஸ்பத்திரியைப் பூட்டுவது மனித நேயமற்ற செயல்

உலகிற் பல நாடுகளிலும் விடுதலைப் போராட் டங்கள், கிளர்ச்சிகள், ஆக்கிரமிப்புக்கள் பதவிப் போட்டிகள் போன்ற பல போராட்டங்கள் முன் னெடுக்கப்பட்டன. போராட்டங்கள் அறவழி நீதியாக வும் வன்முனற நீதியாகவும் இடம் பெற்றன. எந்தப் போராட்ட நிலையிலும் அந்தந்த நாடுகளில் வைத்திய சேவை செய்வோர், பத்திரிகையாளர்கள் மதிக்கப் பட்டார்கள். செஞ்சிலுவைச் சங்கம், செஞ்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கம்போன்ற வைத்திய சேவையாளர் அமைப்புக்கள் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் சேவையாற் றினர்கள்.

ஆனால், சிறிலங்கா அரசு தமிழ்மக்களை தினசரி பலவழிகளில் அழித்து வருகின்றபோதும் அழிவுகளுக்கு மத்தியில் சிக்குண்டு உயிருக்கு ஊசலாடும் பல தமிழ் மக்களின் உயிரைக் காப்பாற்றும் ஒரே ஒரு வைத்திய சேவை நிறுவனமான யாழ். போதனா வைத்திய சாலையை மூடுவதும் மனித நேயமற்ற ஒரு நடவடிக் கையாகும்.

மக்களைப் பாதுகாக்க வேண்டியவர்களே மக்களை அழிக்கின்றார்கள். யாழ். போதனா வைத்தியசாலை மூடும் அறிக்கையிற் கூட்டிக்காட்டியுள்ளது.

காந்தியின் அழுத மொழிகள்

★ வாழ்வையும் சாவையும் சத்தியாக்கிரகம் கலை யாக நமக்குப் போதிக்கின்றது.

★ அக்கிரமத்திற்கு எதிரான நேர்மைப்போராட்டத் தில் வெற்றிபெற ஒரே ஒரு பரிபூரண தூய எதிர்ப்பாவி போதும்,

★ மனதில் பகைமையை அடக்கிவைத்திருப்பது நேரடிப்போரைவிடக் கொடியது.

★ வீரம் உடலின் தன்மையன்று; அஃது ஆன்மா வின் தன்மை.

★ சிந்தனையிலும் சொல்லிலும், செயலிலும் சத்தி யத்தை மேற்கொள்வது நேர்மைப்பாதையின் முதற் கட்டம்.

★ நம் நாட்டின் மிகத்தாழ்ந்த நிலையில் உள்ள மக் களுக்கு விடுதலையளிப்பதுதான் எனது சுயராச்சி யம்.

★ பொதுமக்களின் கருத்துத் திரளுமுன் செய்யப் படும் சட்டம் பயனற்றது.

செய்திச்சரம்

1. 21—04—87 செவ்வாய் கொழும்பு புறக் கோட்டையில் அதிசக்தி வாய்ந்த பாரிய குண்டு வெடித்ததில் நூற்றுக்கும் அதிகமான வர்கள் இறந்ததுடன் 300க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

2. பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு ஜனாதிபதி ராஜினாமாச் செய்யவேண்டுமெனக் கோரி சுதந்திரக்கட்சியினர் சபையில் கூச்ச லிட்டதையடுத்து எதிர்க்கட்சி அங்கத்தவர் அறுவர் காவலர்களால் தூக்கிச் செல்லப் பட்டு வெளியேற்றப்பட்டனர்.

3. கொழும்பு குண்டுவெடிப்பு இஸ்ரேலுடன் சேர்ந்து அரசு மேற்கொண்ட சதி முயற்சியென் றும், இலங்கைக்கு உலகநாடுகள் பல தமது உதவி களை நிறுத்தியதை மீளப்பெறும் பொருட்டு உலகின் அனுதாபத்தை பெறும்வகையிலேயே இக்குண்டுச் சம்பவம் இலங்கை அரசினால் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவுஸ்ரேலிய தமிழீழ அமைப்பு தெரிவித்துள்ளது.

4. நாட்டின் பாதுகாப்பின்மை காரணமாக மே தினம், பாடசாலை வைபவங்கள், தொழிற் சங்க நிகழ்ச்சிகள் உட்பட எவ்வித நிகழ்ச்சி யும் இம்மாதம் நடாத்த அனுமதிக்கவேண்டா மென பொலிஸ் நிலையங்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

5. 22—04—87ல் மூவாயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் கைதாகியுள்ளதுடன் தெகிவளை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனை புறக் கோட்டை ஆகிய இடங்களில் உள்ள தமிழர் களின் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டு சேதப் படுத்தப்பட்டும் உள்ளன.

6. வெளிக்கடைச் சிறைச்சாலையில் தடுப்புக் காவ லில் வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி கள் ஆறுபேர் சிங்கள சிறைக்கைதிகளால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

7. திருமலையில் மீண்டும் குடியேற்றத்திற்காகச் சென்ற 10 தமிழர்கள் குடியேற்றச் சிங்கள வரால் அடித்துக் கொலை செய்யப்பட்டனர்.

8. 25—04—87 சனி தினம் மட்டுநகரில் பொது மக்களில் பலர் பலியானார்கள். வீடுகளும் தீவைக்கப்பட்டன.

9. பனம் பழச்சாற்றில் இருந்து ரொபி தயாரிக் கும் தொழிற்சாலையொன்று சுன்னாகத்தில் மூன் றரைலட்சம் ரூபா செலவில் பனம் பொருள் அபிவிருத்திச்சபையினால் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

10. விண்வெளியில் மனிதர்களுடன் வலம் வரும் ஆய்வு நிறுவனங்களை நாசா அமைக்கவிருப்பது நாசாதிட்டத்தில் பங்கேற்றுவரும் ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சி, கனடா, ஜப்பான் ஆகியவற்றின் அதிகாரிகளுக்கு ஆத்திரமூட்டி யுள்ளது.

11. இராணுவத்தின் குண்டுவீச்சுக்கு இலக்காகி நீர்வேலி, நல்லூர், யாழ்ப்பாணம், சாவகச் சேரி போன்ற இடங்களில் பல வீடுகள் தரைமட்டமாகியுள்ளன.

12, அறவழிப் போராட்டக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாலர் கல்வியில் ஆக்கப் பொருள் சாதனம் பொருட்காட்சி பிரதேசத் தில் நிலவும் பதட்ட நிலை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது.

★ யாழ் நகரில் தொடர்ந்து இடம்பெறும் அசம் பாவிதங்களில் இருந்து பிரயாணிகளை பாது காக்கக் கருதி யாழ் மத்திய பஸ் நிலையம் நல் லூருக்கு இடம் மாற்றம் பெறவிருக்கின்றது.

★ மேற்காபிரிக்க நாடான கினியில் ஆட்சி கவிழ்ப் புக்கு முயன்றதாக அமைச்சர்கள் இராணுவ அதிகாரிகள் உட்பட 60 பேருக்கு மரணதண் டனை விதிக்கப்பட்டது.

★ மொனராகலை விவசாயிகளின் பாரம்பரிய நிலம் பல தேசிய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட வுள்ளதால் சுமார் 4,500க்கு மேற்பட்டோர் பாதிக்கப்படவுள்ளனர்.

(அறவழியின் வெளிநாட்டு வாசகர்களின் நன்மை கருதிப் பிரசுரிக்கப்படுகிறது.)

"சகிப்புத்தன்மை இருந்தால்தான் சமாதானம் நிலவமுடியும். சகிப்புத் தன்மை இல்லாத மனோபாவம்தான் சமாதானத்துக்குக் கொடிய சத்துரு"

சிறுவர் பகுதி

பென்சிலின் கதை

— காளி அண்ணா

தம்பி, தங்கைகளே

நீங்கள் பாவிக்கும் பென்சில்பற்றி எப்பொழுதாவது சிந்தித்துண்டா? பென்சில் தயாரிப்பதற்கு மரம், காரீயம், களிமண், பசை. கொழுப்பு, சாயப்பொருள்கள், அலுமினியம் ஆகிய பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பென்சில் பிறப்பதற்கு முன்பு அது அழகிய பைன் மரமாகவும் நதிபடுக்கைகளில் காரீயமாகவும் மிகச்சிறந்த களி மண்ணாகவும் இருந்தது

ஒரு பென்சில் தொழிற்சாலைக்கு நீங்கள் சென்றால் அங்கு பல அற்புதமான இயந்திரங்களை காணலாம். அவை மிக விரைவாக வேலை செய்பவை. ஒரு மணி நேரத்தில் பல்லாயிரக்கணக்கான பென்சில்களை செய்யக்கூடியவை.

பெரிய இயந்திரங்கள் காரீயத்தையும் களிமண்ணையும் கலக்குகின்றன, அவை நன்கு அரைக்கப்படுகின்றன. பிறகு அத்துடன் பசை சேர்க்கப்படுகின்றது. அவை மறுபடியும் தூளாக்கப்படவேண்டும். இத்தூளிலிருந்து பென்சில் காரீயங்கள் தயாரிக்கப்படுகின்றன. இத்தூள்களுக்கிடையே காற்றுக் குமிழிகளும், அழுக்குப் பொருள்களும் இருக்கின்றன. இவை நீக்கப்படாவிட்டால் பென்சில் காரீயம் நொறுங்கும். எனவே காற்றுக் குமிழிகளை நீக்க இத்தூள்களை இயந்திரத்தின் உதவியால் அதிக அழுக்கத்திற்கு உட்படுத்துகிறார்கள். இந்த இயந்திரத்தில் இருந்துதான் அச்சுக்கள் எனும் தடிப்பான காரிய உருளைகள் வெளிவருகின்றன,

அழுக்குகளை நீக்க இந்த அச்சுக்குள் மிகவும் நேர்த்தியான சல்லடை ஒன்றின்மூலமாகச் செலுத்தப்படுகின்றன. அழுக்கு நீங்கிய மிகவும் நுணுக்கமான காரியத்துகள்கள் சல்லடையிலிருந்து சிறிய இழைகளாக வெளிவருகின்றன. இவற்றிலிருந்து புதிய அச்சுக்கள் எடுக்கப்படுகின்றன. இவைதான் பென்சிலுக்குப் பயன்படும் காரீயக் குச்சிகளாகும். இந்த அச்சு ஒரு சிறு துளையின் வழியாகச் செலுத்தப்பட்டு மெல்லியதாக மாறுகிறது. இந்த இழை சிறு சிறு துண்டுகளாக வெட்டப்படுகிறது. மிருதுவான இவற்றை உலை ஒன்றில் வைத்துச் சுட்டு உலர்த்தி கொழுப்பில் ஊற வைக்கவேண்டும்.

"மனிதர்களுக்கு நம்பிக்கை உண்டாக்காத கல்வியால் பயனில்லை. கல்வியைவிட நம்பிக்கை பெரியது. நம்பிக்கை மனிதனுக்கு மூளைச்சோம்பலை ஒழிக்கும். வெறும் ஏட்டுக்கல்வி மூளைச் சோம்பலைத்தான் பெருக்குகிறது."

இதற்கிடையில் பைன் மரத்துண்டுகள் பல மாறுதலுக்கு உட்படுகின்றன. சமஅளவுள்ள சிறு பலகைகளாக இவை வெட்டப்படுகின்றன, ஒவ்வொரு பலகையிலும் ஆறு சிறு தவாளிப்புகள் (கான்கள்) உள்ளன, இவற்றில் காரியக் குச்சிகள் வைக்கப்படுகின்றன, அதே அளவுள்ள தவாளிப்புகளோடு கூடிய பலகை ஒன்று முதல் பலகையை மூடுகின்றது. இரு பலகைகளும் இப்போது ஒட்டப்படுகின்றன.

ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ள ஆறு பென்சில்கள் தனித் தனியாக வெட்டப்படுகின்றன. ஒரு இயந்திரம் அறுகோண வடிவமாகவோ, உருளையாகவோ அவற்றை வெட்டுகிறது. இவற்றிற்கு ஒரு இயந்திரம் வார்னிஷ் பூசுகிறது. இதன்மேல் காகிதம்போன்று மெல்லிய அலுமினிய சேக்கு சுற்றப்பட்டு முடிவாக அதன்மீது முத்திரையும் அடையாளக் குறியும் பொறிக்கப்படுகின்றன.

மரம் வெட்டுபவர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், களிமண் எடுப்பவர்கள், பசை சேகரிப்பவர்கள், தச்சர்கள், கொல்லர்கள், பென்சில் "தொழிற் சாலையில் உள்ள தொழிலாளர்கள் என பலரின் உழைப்பில் உருவானதே உங்களது கையில் இருக்கும் பென்சிலாகும்.

எனவே அதனிடம் மரியாதையாக நடந்து கொள்ளுங்கள், அவசியமாக சீவாதீர்கள். அலட்சியமாக அதை எந்த இடத்திலும் எறிந்துவிடாமல் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள்.

அறவழிப் போராட்டக் குழு முன்னெடுக்கும்

பாலர் கல்வியில்

ஆக்கப் பொருள் சாதனம்

எப்போது: 22—5—1987
23—5—1987

எங்கே: மட்டுவில் மகாவித்தியாலயம்

பாலர்களின் ஆக்கப்பொருள் சாதனங்களைக் கண்டு மகிழ அன்புடன் அழைக்கின்றோம்.

அறவழிப் போராட்டக் குழு.

சமாதானத்திற்கான கல்வி

சமாதானம் என்பது இனத்துக்கானதோர் இலட்சியமாக விளங்கவேண்டும் எனும் புதிய கருத்து முன்னெப்பொழுதும் இல்லாத வண்ணம் மக்களிடையே சிறந்து விளங்குகின்றது. உலக அமைதியை நாம் உருவாக்கினுல் அன்றி நாம் நம்மையும் இவ்வுலகில் உள்ள சகல உயிரினங்களையும் சிதைத்து விடுவோம் என்ற உண்மையை யாவரும் உர்ணந்துள்ளனர். இவ் வுணர்வே உலக சமாதானத்தை உருவாக்க வேண்டிய எண்ணம் உயர்ந்து நிற்பதற்கு ஓரளவு காரணமாகும்.

பிரிந்து ஒதுங்கி வாழ்கின்ற காலங்கடந்த மனப்பாங்குகளை மக்கள் இப்போது மீண்டும் சீர்தூக்கிப் பார்க்கின்றனர். ஓர் புதிய சிந்தனை மக்களை நெறிப்படுத்துவதனுல்தான் இந்த மீளாய்வு சாத்தியமாயிற்று. மனித உடல், உள்ளம், உயிர், யாவற்றினதும் முழுமையான வளர்ச்சியை இலக்காகக்கொண்ட அணுகுமுறைகள் யாவற்றிலும் புதிய சிந்தனையினுல் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

நல்லெண்ணம்கொண்ட மக்கள் உலகையும் தமது சொந்த வாழ்வையும் மிகவும் பரந்து பட்டதோர் காட்சியின் ஓர் அங்கமாக நோக்குகின்றனர். தமது வாழ்க்கையியும் இப்புதிய முறையினைக் கடைப்பிடிக்க முடியும், அதற்கான ஆற்றல் தம்மிடம் உள்ளதையும் அவர்கள் உணர்கின்றனர்.

வாழ்க்கை ஒரு பூரணத்துவமானது என்ற புதிய விடயம் அன்பு எனும் சக்தியுடன் இணைந்துவருவதாகும். தமது வாழ்வின் வளம் அதன் பல்வேறுபட்ட தன்மை என்பவற்றை வெளிப்படுத்தக கூடியதான ஓர் வாழ்க்கை முறையினை தனிப்பட்ட ரீதியிலும் கிராம மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் அமைக்கவும் இவ்விதமான ஓர் சிறந்த உலக சமுதாயத்தை அமைக்கவும் வேண்டிய விருப்பம் எங்கும் காணலாம். இது ஓர் புதிய சிந்தனையாகும். இது முறறு முழுதாய் நம்பிக்கை தருவதாகும். இவ்விதமான சிந்தனை 1980ம் ஆண்டுக்கு முன் இருந்ததில்லை.

1986ம் ஆண்டு சர்வதேச சமாதான ஆண்டாகக் கொண்டாடப்பட்டதால் சமாதான இயக்கத்துக்கு மிகப்பெரும் ஆதரவு கிடைத்துவருகின்றது. உலக மக்கள், அமைப்புகள், அரசாங்கங்கள் சமாதானத்தில் விசேட கவனம் செலுத்தும் வண்ணம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சமாதானத்தை உருவாக்குதல் என்றுல் உடனடியாக முரண்பாடுகளை களைதல் என்று அர்த்தமல்ல. முரண்பாடுகளே சில சமயம் வளர்ச்சிக்கான வழியாக விளங்கும். முரண்பாடுகளின்போது தோன்றும் எதிர் கருத்துக்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் இடம்கொடுக்க வேண்டும் என்று விரும்புதலே முரண்பாடுகளை வரவேற்றல் என்பதன் பொருளாகும். இவ் விதமான முரண்பாடுகளினூடாகப் பிரச்சினைகளை பரந்த நோக்கில் ஆராய்ந்து பொதுவான தோர் இலக்கினை எய்த முயற்சிக்கலாம்.

இருபத்தோராம் நூற்றுண்டிலே மனித குலம் வாழவேண்டுமென்றுல் சமாதானமான உலக உறவைக் கட்டியெழுப்பும் பணியில் மக்கள் தமது மேலும்பகுதியையும் நேரத்தையும் சக்தியையும் திறனையும் அர்ப்பணத்தல் வேண்டும்.

எமது உலக வாழ்வினை உற்றுநோக்கினுல் நாம் அனைவரும் ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் உண்மை புலப்படும். வறுமை, வேலையில்லாமை, பசி, மனித உரிமைகள் மறுப்பு, செல்வந்தர்களால் வறியோர் சுரண்டப்படுதல் என்பன இவ்வுலகில் நாம் எதிர் நோக்கும் பல பிரச்சனைகளாகும். இப்பிரச்சனைகளின் ஆணிவேரைக் கண்டு அறுத்தெறிய ஆரம்பிக்கவேண்டும். இல்லையேல் நாம் இது வரை கண்டிராத வன்முறைகளை வெடிக்கச் செய்து அழிவுகள் ஏற்படுத்துவதை தவிர்க்க முடியாது போய்விடும். எனவே சமாதான வழியை நாடுவதைத்தவிர வேறு நல்வழி எமக்கில்லை. உலகில் ஓர் புதிய வாழ்க்கை முறை உருவாக பயன் தரக்கூடிய சர்வதேச இணக்கம் ஏற்படுதல் வேண்டும். இவ்வித இணக்கம் காணப்படாவிடில் பொதுவான ஆயுதப் பரிகரணம் சாத்தியமற்றதாகிவிடும். அத்தோடு அணு ஆயுதப்போரின் அச்சுறுத்தலை ஒழிக்கமுடியாது போய்விடலாம்.

உலக மக்கள் மத்தியில் விசேடமாக இளைஞர்கள் மத்தியில் உலக சமாதானத்துக்கான விருப்பமும் விழிப்புணர்வும் ஏற்படுத்துவதே சமாதானத்துக்கான கல்வியின் பொதுவான நோக்கமாகும்.

இதுதான் எங்கள் உலகம்!

அரசியலுக்குப் பல கட்சிகள்; பொருள் வளம் பெருக்கச் சங்கங்கள், கூட்டுறவுகள், நிறுவனங்கள்; ஆன்மீகம், தத்துவம், சமயம், இவை பேண, மன மாற்றச் சபைகள், கழகங்கள்; இலக்கிய வட்டங்கள், எழுத்தாளர் கழகங்கள், தமிழ்ச் சங்கங்கள், தமிழாராய்ச்சி மன்றங்கள்; தொழிலாளர் நலன் பேண தொழிற்சங்கங்கள், தொழிலாளர் அணிகள்; இசை, கலை, நடனம் திரைப்படம் இவைக்குக் கழகங்கள், சபாக்கள், சுவைஞர் வட்டங்கள்.

ஊர் முன்னேறப் படிப்பகங்கள், அறிவகங்கள், நூல்நிலையங்கள்; இவை நடாத்தக் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், அணிகள். இப்படி வாழ்வின் பல்வேறு துறைகளில ஈடுபட்டுப் பணி புரியும் இயக்கங்கள் தமிழரிடையே உண்டு. முக்கியமான ஒரு துறையில் தமிழர் அக்கறை காட்டவில்லை; கூட்டம் கூடவில்லை; கலந்துரையாடவில்லை.

அறிவியல் துறை வளர்ச்சிக்கு, ஆராய்ச்சிக்கு தமிழர் கழகங்கள் அமைக்கவில்லை. ஆராய்ச்சி மாநாடுகள் கூட்டவிவ்லை, தமிழ் அறிவியலாளர்கள் ஆங்கிலத்தில்தான் அறிவியல் துறையில் வளர்ச்சியடைந்து வருகின்றார்கள். ஆங்கிலமொழிமூலம்தான் ஆராய்ச்சிக்கும் அறிவு பரம்பலுக்கும் முயற்சி செய்கின்றார்கள். தமிழ் அறிவியலாளர்கள் ஒன்று கூடவில்லை, தம்மை அடையாளம் காணவில்லை. சங்கமோ கழகமோ, மன்றமோ அமைக்கவில்லை.

எனவே தான் தமிழர்களிடையே பறவையியற் கழகங்கள் இல்லை. பறவையியலாளர்கள் இருக்கின்றார்கள், அவர்கள் பிறமொழிப் பறவையியல் சுழகங்களுடன், பிறநாட்டுப் பறவையியல் கழகங்களுடன் தொடர்பு கொண்டு உறுப்புரிமை பெற்றுள்ளார்கள். தமிழ் நிலத்தில் பறவைகள் உண்டு. ஆனல் பறவையியல் கழகங்கள் இல்லை. பறவையியல்பற்றிய சஞ்சிகைகள் இல்லை. பறவையியல் பற்றிய தமிழ் நூல்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

உலகின் பல மொழிகளில் ஆண்டு ஒன்றிற்குப் பறவையியலைபற்றிமட்டும் 4000 கட்டுரைகள் வெளி வருகின்றன. இன்றைய உலகில், தமிழில் எதுவும் வெளிவராதமை, மனித நாகரிக ஓட்டத்தில் கலக் காமல் தமிழர் பின் தங்கிவிடக்கூடிய நிலைமையை ஏற்படுத்திவிடலாம்.

பறவையியலாளர்கள் கூடுவது, கழகம் அமைப்பது, கருத்துப் பரிமாறுவது, சஞ்சிகை வெளியிடுவது, உலகில் உள்ள முன்னேறிய நாடுகள் அனைத்திலும் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சியாகும். சாதாரண பறவைப்பிரியர்கள் தொடக்கம் கற்றுத்துறைபோகிய பறவை ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள் வரை இக் கழகங்களில் உறுப்புரிமை வகிக்கின்றார்கள்.

அனைத்துலகப் பறவையியலாளர் கழகம், இந்தக் கழகங்கட்கெல்லாம் தாய்க்கழகம். நான்கு ஆண்டு கட்கு ஒருமுறை இக்கழகம் கூடும். மாநாடு நடாத்தும். கருத்தரங்குகள் நடாத்தும். மாநாட்டிலும் கருத்தரங்கிலும் கூறப்பட்ட கருத்துக்களைத் திரட்டித் தொகுத்துநூலாக வெளியிடும். (நன்றி: பறவைகள்)

எம் மண்ணில் காந்தி பெயரால் ஆரம்பிக்கப்பட்ட முதல் நிலையம்

மகாத்மா காந்தி நிதியில் இருந்து இந்திய அரசு தந்த பணத்தில் இருந்து 1949ம் ஆண்டு இலங்கையிலேயே முதன் முதலாக காந்தி பெயரில் நிறுவப் பட்டது இந்த காந்தி சனசமூக நிலையமாகும், இந் நிலையத்தை 1950ம் ஆண்டு இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்தவரும் பிற்காலத்தில் இந்தியக் குடியரசில் ஜனதிபதியாக இருந்தவருமான திரு. வி. வி. கிரி அவர்கள் திறந்து வைத்தார்கள். இன்று 38வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இந்த நிலையம் இதுவரை பல சாதனைகள் புரிந்துள்ளது.

இவ்வாறு அரியாலை மேற்கு காந்தி சனசமூகநிலையத்தின் 38வது ஆண்டு விழாவை ஒட்டி நடைபெற்ற விளையாட்டு கலைநிகழ்ச்சிகளுக்குப் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் காந்தி சனசமூக நிலையத்தின் ஸ்தாபகரும் வெட்டுக்குளம் சிறி புவனேஸ்வரி அம்பாள் ஆலய தர்மகர்த்தாவுமாகிய திரு. வல்லிபுர சின்னப்பு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில். இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்த திரு. பீம்சச்சார் நிலையத்தின் தலைவராக நான் இருந்தபோது இந்திய அரசின் நன்கொடையாக பல ஆயிரம் ரூபா பெறுமதியான மகாத்மா காந்தியின் நூல்களையும் மகாத்மா காந்தியைப்பற்றி பிற அறிஞர்கள் எழுதிய நூல்களையும் அன்பளிப்பு செய்தார். இவ்வாறு இந்திய அரசு தெரிந்து வைத்திருக்கின்ற அளவுக்குப் பிரபல்யமான இந்த நிலையம் கலைகளையும், உடல்பயிற்சிகளையும் வளர்ப்பதில் தொடர்ந்து ஈடுபடவேண்டிம். மகாத்மா காந்தி யாழ்ப்பாணம் வந்த சமயம் அமரர் யோவேல் போல் மகாத்மா காந்தியுடன் வைத்த தொடர்பு காரணமாகவும், பிற்காலத்தில் திரு. க. ஐயம்பிள்ளை ஆசிரியர் எடுத்துக்கொண்ட முயற்சியினலும் இந்த நிலையத்தை நிறுவ எம்மால் முடிந்தது.

காந்தி காட்டிய வழி ஒழுகி போட்டி பொறுமை களைக் கைந்து அவரின் ஞாபக கின்னத்தை மேலும் வளர்ப்போமாக. (நன்றி—ஈழநாடு)

AMNESTY INTERNATIONAL NEWS LETTER

சர்வதேச மன்னிப்புச்சபையின் மாதாந்த ஆங்கில செய்திக் கடிதத்தினைப் பெறவிரும்புவோர் ஒவ்வொரு இதழுக்கும் ஐம்பதுசதம் பெறுமதியான தபால் முத்திரையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு கொள்ளவும்,

செயலாளர்

அறவழி போராட்டக் குழு

த, பெ. இல: 2.

சாவகச்சேரி.

அறநோக்கில்

எழுத்தறிவின்மை

உலகில் இன்னமும் எழுத—வாசிக்கத் தெரியாமல் எத்தனை மக்கள் இருக்கின்றார்கள் என்ற விபரம் சரியாக யாருக்குமே தெரியாமல் இருக்கின்றது.

சிலருக்கு வாசிக்கத்தெரியாது—சிலருக்கு எழுதத் தெரியாது. கிராமப்புறங்களில் இருக்கின்ற பலருக்கு இன்னமுமே தமது கையொப்பங்களை வைக்கத் தெரியாமல் இருக்கின்றார்கள்.

1985ம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கியநாடுகள் சபையின் ஒரு அங்கமாகத் திகழ்கின்ற யூனெஸ்கோ ஸ்தாபனம் உலகளாவிய ரீதியில் எடுத்த உத்தேச புள்ளி விபரப்பிரகாரம், 15 வயதுக்குமேல் எழுத்தறிவின்மை உள்ள மக்களின் தொகை 889 கோடியாகும். இவற்றில் 98 வீதமானவர்கள் வளர் முக நாடுகளில் இருக்கும் மக்களாவர்.

தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் எழுத்தறிவின்மையுள்ள மக்களின் தொகை 666 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இவ்அடிப்படையில் பார்க்கும்போது தமிழ் சமுதாயத்திலும், எழுத்தறிவின்மையுள்ள மக்களின் தொகை பெருமளவில் இருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

கிராமப்புறங்களில் வாழ்கின்ற பதினைந்து வயதுக்கு மேற்பட்ட பல ஆயிரக்கணக்கானவர்கள் எழுத—வாசிக்கத் தெரியாமல் இருக்கின்றனர்.

இவ்வாறான மக்களுக்கு எழுத—வாசிக்கக் கற்றுக்கொடுக்க எம்மத்தியில் முதியோர் கல்விக் கூடங்கள் இல்லாமல் இருப்பது பெருங்குறையாகவுள்ளது.

தமிழ்ப்பிரதேசத்தில் எழுதவாசிக்கத் தெரியாமல் இருக்கின்ற மக்களின் உண்மையான தொகைகளை சரியான ஆய்வுகள்மூலம் திரட்டல்வேண்டும்.

திரட்டப்படுகின்ற ஆய்வுகளின் அடிப்படையில், எழுத—வாசிக்கத் தெரியாமல் இருக்கின்ற மக்களுக்கு எழுத்தறிவு, வாசிப்பறிவை ஏற்படுத்த எம்பகுதியில் இருக்கின்ற பொது ஸ்தாபனங்கள் முன்வருதல் காலத்துக்கேற்ற அரும்பணியாகும் என அறவழி கருதுகின்றது.

இவ்வகையில், கிராமங்களில் இருக்கின்ற சன சமூக நிலையங்கள் அவ்வவ் நிலைய எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் எழுத வாசிக்கத் தெரியாமல் இருக்கின்ற மக்களை இனங்கண்டு, குறித்த நிலையங்களில் மாலை நேரங்களில் எழுத—வாசிக்கக் கற்றுக்கொடுக்க முயலுதல் நல்ல பணியாகும்.

கட்டிடங்கள் கட்டுவதிலும், விழாக்கள், கூட்டங்கள் நடாத்துவதிலும் காட்டுகின்ற கரிசனை, அக்கறைகளைவிட, அவ்வவ்பகுதியில், எழுத்தறிவின்மையால் பாதிக்கப்பட்டுவருகின்ற மக்களுக்கு அவர்களின் அறிவுக்கண்களைத் திறத்தலே இன்றைய காலகட்டத்தில் ஏற்ற—ஒப்பான பணியாகும் என அறவழி வலியுறுத்துகின்றது.

விரைவில்
வெளிவருகிறது

அறவழிப் போராட்டக் குழுவின் கல்விப்பணி வெளியீடாக விரைவில் வெளிவருகிறது.

"சமுதாய மாற்றத்துக்கான அறவழிப் பயிற்சிக் கைநூல்"

(Resource Manual For a Living Revolation)

ஆ-ர்

NVDAG REPORT

அறவழிப் போராட்டக் குழுவின் காலாண்டு ஆங்கிலச் சஞ்சிகையைப் பெறவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்

அறவழிப் போராட்டக் குழு,
த. பெ. இல. 2,
சாவகச்சேரி.

இப்பத்திரிகை அறவழிப் போராட்டக் குழுவினால், யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1987 வைகாசி 20ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.